# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 60/2023 நாள்.11.08.2025

DW1- திரு.நெடுமாறன் , த /பெ. திரு. தங்கவேல்

2 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி

பி.சா.ஆ. 2 ஆவணம் CC 320/22 வழக்கானது இன்றளவு நடக்கிறதா என்றால் தெரியாது. இதற்கு முன்பு யாரும் வழக்கறிஞர் இருந்தாரா என்றால் ஆமாம் திரு.செல்வராஜ். பி.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பில் என்ன விபரம் உள்ளது தெரியாது என்றால் ஆமாம். அறிவிப்பில் நான் சொல்லிதான் பார்த்தசாரதி என்ற என்னுடைய வழக்கறிஞர் அந்த பதில் அறிவிப்பை அனுப்பினார் என்றால் ஆமாம். 2017 இல் 40 லட்சம் நாலுபேரும் பெற்றுகொண்டதாக சொல்லியுள்ளோமே சரியா என்றால் இல்லை. அந்த அறிவிப்பில் யார் பெற்றுகொண்டதாக சொல்லியுள்ளோம் என்றால் வாதி தண்டபாணி. ரூ 40 லட்சம் யாருடைய பணம் என்றால் நாலுபேரின் பணம் ஆளுக்கு எவ்வளவு என்றால் 10லட்சம். ரூ40 லட்சம் கொடுத்துவிட்டு பவர் வாங்கினோமே வருமான வரி செலுத்தியுள்ளோமா என்றால் இல்லை.40 லட்சம் செலுத்தியதற்கு கணக்கு காட்டினோமா என்றால் இல்லை. பி.சா.ஆ.5க்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல உள்ளது. பி.சா.ஆ.5 5ஆம் பிரதிவாதிக்காக அவருடைய வழக்கறிஞர் கொடுத்த அறிவிப்பு என்றால் ஆமாம். தற்போது நாலுபேர் பவர் ஏஜெண்ட்டுகளில் முருகானந்தம் 2ஆம் பிரதிவாதி தவிர மற்ற மூவரும் ஒன்றாக உள்ளோம் என்றால் ஆமாம். வரவு ரசீது எதுவும் தண்டபாணியிடம் இருந்து பெறவில்லை என்றால் ஆமாம்.

வாதி தரப்பு குறுக்குவிசாரணை

நான் என்ன தொழில் என்றால் சரபோஜி கல்லூரியில் கவுரவ விரிவுரையாளராக பணிபுரிகிறேன். தாவா சொத்துஆதியில் பிலிப் அருள்ராஜ் என்பவருக்கு பாத்தியபட்டது என்றால் ஆமாம். 2ஆம் வாதி பிலிப் அருள்ராஜ் என்பவரிடமிருந்து கிரய பெற்றதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் ஆமாம். நான், முருகானந்தம் , ஐயப்பன் முகமது ரிஸ்வான் ஆகிய நான்குபேரும் கூட்டாக சேர்ந்து 5ஆம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தி கொடுத்த வா.சா.ஆ.1 ஆவணத்தை பொறுத்து எனக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ஆவணம் எங்களுக்கு இருந்து பொது அதிகார

ஆவணத்தின் அடிப்படையில் ஏற்பட்டது என்றால் ஆமாம். வாதி வழக்கின் விபரம்தெரியுமா என்றால் தெரியும். என்னுடைய கட்சி என்பது வாதி வசம் பொது அதிகார ஆவணத்திற்கு முன்பு தொகை செலுத்திவிட்டதாக கட்சி என்றால் ஆமாம். அவ்வாறு தொகை செலுத்திய விபரம் பொது அதிகார பத்திரத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் ஆமாம். பொது அதிகார ஆவணத்தில் இதற்கு கைமாறு தொகை எதுவும் தங்களிடமிருந்து நான் பெறவில்லை என்ற ஆவணத்தின் பக்கம் 5 இல் சொத்திற்கு விபரத்திற்கு மேல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா ஆ.2 பிறகு வாதியிடம் நான் வேறு எந்த ஒப்பந்தமும் இடவில்லை என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்பட்டபோதும் வாதியிடம் வேறு எதுவும் ஒப்பந்தம் இல்லையா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் நான் அதிகார முகவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நான் வாதியின் அதிகார முகவர் என்பதில் ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் வரவு செலவு கணக்குகளை என் வசம் தாக்கல் செய்யவேண்டும் என்று பக்கம் 5இல் பத்தி 5இல் உள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 ஆவணத்திற்கு பின்னிட்டு நான் வாதியிடம் வரவு செலவு கணக்கோ தொகையோ ஒப்படைக்கவில்லை என்றால் ஆமாம். அதேபோல் 1 முதல் 4பிரதிவாதிகள் கணக்கு ஒப்படைக்கவில்லை என்றால் ஆமாம். 5ஆம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தி கொடுத்த வாசா.ஆ.1 கிரய பத்திரத்தில் அது நாங்கள் வாதியின் அதிகார பெற்ற முகவர் என்ற முறையில் ஏற்படுத்தபட்டுள்ளது என்றால் ஆமாம். இந்த ஆவணத்தில் சொத்து விற்பது குறித்து வாதிக்கு தகவல் தெரிவித்தாக குறிப்பும் உள்ளதா என்றால் இல்லை. அதேபோல் வரைவு தயாரித்து வாதிவசம் ஒப்புதல் பெற்றதாக குறிப்பு எதுவும் இல்லை என்றால் இல்லை. 1 முதல் 4 பிரதிவாதிகள் வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்துவதற்கு வாதிவசம் ஒப்புதல் பெற்றதாக எந்த ஆவணமும் இல்லை என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிரய மறுபயன் தொகை ரூ 22,53,000 என்று நிர்ணயம் செய்யபட்டுள்ளது எதன் அடிப்படையில் அவ்வாறு நிர்ணயம் செய்தோம் என்றால் சந்தைமதிப்பே அவ்வளவுதான். சந்தைமதிப்பு 40லட்சம் என்று சொன்னாலோ, 80 லட்சம் என்று சொன்னாலோ தவறு என்றால் ஆமாம். நாங்கள் வாதிவசம் ரூ 40 லட்சம் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் கொடுத்துள்ளோம். அவ்வாறு பணம் கொடுத்ததை காண்பிக்க ஆவணம் எதுவும் இல்லை என்றால் ஆமாம். நான் அந்த

மாதிரி வாதிக்கு எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை. என்னுடைய எதிர்வழக்குரையில் நாங்கள் நால்வரும் கூட்டாக சேர்ந்து ரியல் எஸ்டெட் பிஸ்னஸ் செய்ததாக சொல்லியுள்ளேனே அதில் எங்கள் பங்கு என்ன என்றால் இடம் வாங்கி விற்பது. தாவா சொத்தை நாங்கள் கிரயம் வாங்கவில்லை என்றால் ஆமாம். நாங்கள் எந்த சட்டத்திற்கு கீழாகவும் ரியல் எஸ்டெட் தொழில் செய்வதை பதிவு செய்யவில்லை என்றால் ஆமாம். அவ்வாறு பதிவு செய்யாமல் கூட்டாக ரியல் எஸ்டெட் தொழில் செய்ய தடை செய்யபட்டுள்ளீர்கள் என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணம் மறுபயன் தொகை அனைத்தும் எங்கள் நால்வரின் வங்கி கணக்கில் தனிதனியாக வரவாகியுள்ளது என்றால் ஆமாம். என் வங்கி கணக்கிலிருந்து வாதியின் வங்கி கணக்கிற்கு அதன்பின் தொகை அனுப்பப்பட்டதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்ட பின்னர் வாதிக்கு எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். நாங்கள் வாதி கோரியவாறு அவருக்கு தொகை கொடுக்க கடமைபட்டவர் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் வாதியுடன் வாய்மொழி ஒப்பந்தம் 2017 நவம்பரில் ஏற்படுத்தி கொண்டது உண்மையல்ல என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் ரூ 40 லட்சம் கொடுத்துவிட்டு வா.சா.ஆ.2 பொது அதிகார பத்திரம் பெற்றதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. கோவிந்தசாமி என்வருக்கு என்ன உறவு என்றால் உறவு இல்லை நண்பர்தான். வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்படுவதற்கு முன்பாகவே அவர் எனக்கு நண்பர் என்றால் ஆமாம். அதேபோல் மற்ற பிரதிவாதிகளுக்கும் நண்பர் என்றால் ஆமாம். நாங்கள் பிரதிவாதிகள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து வாதியை ஏமாற்றுவதற்காக வா.சா.ஆ.1 கிரய பத்திரம் தயார் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. வாதிகோரியபடி பரிகாரம் அவருக்கு கிடைக்ககூடியது என்று சொன்னால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப .நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.